விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 9 | ஜ. அவ் 11 | இதழ் 346
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 22-1-1986

## "அமைதி ஏற்பட்டால் ஆயுதப்படைகளை நான் நிராயுதபாணியாக்குவேன்"

### 'இந்து'வுக்கு ஜனாதிபதி பேட்டி

[கொழும்பு]

''இந்தியாவிலும் இலங்கையிலும் வன்முறைகளைக் கைவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டால் அமைதி ஏற்படும். இதுதான் நீங்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய பங்களிப்பு. தயவுசெய்து அதைச் செய்யுங்கள். நான் பாதுகாப்புப்படைகளை உடனடியாக முகாமிற்குத் திருப்பி அனுப்புவேன். அவர்களை நிராயுதபாணியாக்குவேன்.''

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 'இந்து பத்திரிகையின் துணை ஆசிரியர் திரு. என். ராமுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அளித்த விசேட பேட்டியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இப்பேட்டியில் ஜனாதிபதி ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது:-

''அவசரகால நிலைமையிருந்தால்தான் படையினரால்

[8-ம் பக்கம் பார்க்க]



# எதிர்ப்பு ஊர்வலம்!

## யாழ். முஸ்லிம்கள் நடத்தினர்

[எம். ரி. சந்திகுனார்]

ஸ்ரீலங்கா அரசு பிரகடனப்படுத்தியுள்ள ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்தும், கோட்டையிலிருந்து இராணுவத்தை வாபஸ்பெறக் கோரியும், இராணுவத்தின் குண்டுவீச்சுக்கு பலியான ஒன்பது முஸ்லிம்களுக்கு அனுதாபம் தெரிவித்தும். யாழ் முஸ்லிம் மக்கள் நேற்றுக் காலை யாழ் நகரில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

''யாழ். முஸ்லிம்கள் அனாதைகள் அல்ல. உலக முஸ்லிம் மக்களுக்கு எமது இன்னல் குரல் ஒலிக்கட்டும்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பெரிய சுலோகம் ஒன்றை இரு முஸ்லிம்பிரதிநிதிகள்கொண்டு செல்ல [illegible] நூற்றுக்கணக்கான மக்களுடன்ஒஸ்மானியா கல்லூரி சந்தியிலிருந்து நேற்று காலை 9-45 மணியளவில் ஊர்வலம் ஆரம்பமானது.

''பாதுகாப்புவலயம் வேண்டாம், பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இனப்படுகொலை, பார்வையாளர்கள் வேண்டும், பங்காளிகள் வேண்டாம் போன்ற கோஷங்கள் உட்பட பல்வேறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் சுலோக அட்டைகளுடன் சென்று கொண்டிருந்த ஊர்வலத்தில் பள்ளிவாசல் பரிபால

(8-ம் பக்கம் பார்க்க)

# மறியல்!

## கடையடைப்பு!

### யாழ்ப்பாணத்தில் இன்று நடக்கிறது

[ஏ. வி. மாணிக்கம்]

யாழ். கோட்டையிலுள்ள இராணுவமுகாமை அகற்றுவதுடன், யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களைச் சூழவுள்ள ஆயிரம் மீற்றர் பந்தோபஸ்து வலயத்தையும் வாபஸ்பெற வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்து இன்று யாழ். குடாநாடெங்கும் பூரண கடையடைப்பும், யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது.

யாழ் குடாநாடெங்கும் உள்ள வியாபார நிலையங்களை மூடி இன்று காலை எட்டு மணியளவில் யாழ் ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள மின்சார நிலையத்திற்கருகில் சகல வர்த்தகர்களையும் கூடுமாறு யாழ் வர்த்தகர் சங்கச் செயலாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

## "பொலிஸ்நிர்வாகமிருந்தால் ராணுவம் வாபஸாகும்"

### செய்தியாளருக்கு பிரிகேடியர் பேட்டி

(நமது நிருபர்)

"வடக்கில் 'பொலிஸ் நிர்வாகம்' முழுமையாகச் செயல்படுமானால், இராணுவம் வாபஸ் பெறப்படும். பாதுகாப்பு வலயம் குறித்து பொது மக்கள் பதற்றமோ, பீதியோ அடையத் தேவையில்லை" என்று வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்கா தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் கோட்டை 'கிங்ஸ் ஹவுஸ்' விடுதியில் பத்திரிகையாளர் மாநாடு

(5-ம் பக்கமும் பார்க்க)

## தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை 1985

தொழிற் கற்கைகளுக்கான தேசிய தராதரப் பத்திரம் (N C B S) ஆங்கில, தமிழ் சுருக்கெழுத்தாள தராதரப் பத்திரம் (STENOGRAPHERS) என்பவற்றிற்கான மேற்படி பரீட்சை 1986 ஜனவரி 27-ஆம் திகதி ஆரம்பமாகும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் உடனடியாக வந்து தமது பிரவேசப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

சி. இராசேந்திரா
அதிபர்
தொழில் நுட்பக் கல்லூரி,
பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[A 113]

● வேலணை ப. நோ. கூ. சங்க கிளைகளின்

## தேர்தல் காலவரையின்றி ஒத்திவைப்பு நியமனப்பத்திரங்களுக்கு தீவைப்பு!

[வேலணை]

வேலணை ப. நோ. கூ. சங்கத்தில் எதிர்வரும் 25-ம் திகதி நடைபெறவிருந்த கிளைகளுக்கிடையிலான தேர்தல்; ஒழுங்குவிதிகள் சில முரண்பாடுகள் காரணமாகவும், அங்கு இடம்பெற்ற சில சம்பவங்களினாலும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரி திரு. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்

சங்கத்தின் 1-ம் கிளைகளுக்கிடையிலான அபேட்சகர் நியமனப்பத்திர தாக்கல்திகதி சென்ற 18-ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. அபேட்சகர் நியமனப்பத்திரங்க

(5-ம் பக்கம் பார்க்க)

### ஒய்வூதியம் வழங்கல் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். விளையாட்டரங்கில் வைத்து வழங்கப்பட்டுவந்த ஓய்வூதியம் பாதுகாப்பின்மை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

தபால் அலுவலகங்களில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுககு ஜனவரி மாதத்துக்கான ஓய்வூதியம் கடந்த 13ம்,

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். தபால் விநியோகம் இன்று சீராகும்

[யாழ்ப்பாணம்]

பாதுகாப்பின்மை காரணமாக மூடப்பட்டிருந்த யாழ். கோட்டைக்கு முன்பாக உள்ள யாழ் தபால் அலுவலகம் நேற்றுத்தொடக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 16 ம் திகதி யாழ். நகர சம்பவத்தைத் தொடர்ந்து அச்சமடைந்த தபால்

(5ம் பக்கம் பார்க்க)

## வாபஸ்பெறுமாறு கோரிக்கை

### காரைநகரில் மக்கள் வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தின் சகல இடங்களிலுமுள்ள இராணுவ, கடற்படை முகாம்களைச் சுற்றிப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆயிரம் மீற்றர் தூரப் பாதுகாப்பு வலயத்தினால் அவ்வப்பகுதிகளில் வாழும் மக்கள் படும் துயரங்களையும, இடையூறுகளையும் எடுத்துக் கூறி, அவற்றை நீக்குமாறு கேட்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த பிரஜைகள் குழு உறுப்பினர்கள் யாழ். கோட்டைக்குச் சென்று யாழ் மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்காவைச் சந்தித்தனர்.

திரு. கே. விசுவலிங்கம்,

[5ம் பக்கம் பார்க்க)

### இன்று தீர்ப்பு

[புதுடில்லி]

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் படுகொலை வழக்கு விசாரணையில் இன்று தீர்ப்பு வழங்கப்படவிருப்பதை முன்னிட்டு, சீக்கிய தீவிரவாதிகள் வன்

[5-ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வவுனியா நகரசபைக்குட்பட்டதும் பத்தினியார் மகிழங்குளத்தில் 4 ஏக்கர் மேட்டு நிலக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. தேவராஜா, தாண்டிக்குளம், வவுனியா. [C-301]

வட்டுக்கோட்டையில்யாழ்ப்பாணக்கல்லூரிக்கு அருகாமையில் மின்சார, குழாய்நீர் விநியோக வசதிகளுடன் 1980ம் ஆண்டு கட்டிய வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக்காணி (பிரயோசனங்களுடன்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: Mrs R. Rajenthiram, J. C, T. I., Vaddukoddai (A 121)

## தேவை

புதிதாகத் தொடங்கவிருக்கும்ஆங்கிலசுருக்கெழுத்து,தட்டெழுத்து மற்றும் வர்த்தக வகுப்புகளுக்கு அனுபவமுள்ள ஆசிரியைகள் தேவை. இப்போதைய தொழில், எதிர்பார்க்கும் சம்பளம் உட்பட எல்லா விபரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். விபரங்கள் அனைத்தும் இரகசியமாகவைத்திருக்கப்படும். தொடர்பு: விளம்பர இல. C 305 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 305)

மினி சினிமா ஒன்று திறப்பதற்கு ஒரு சிறிய ஹோல் (Hall) 60' X 40' அல்லது வீடு யாழ் மாநகரசபை எல்லைக்குள் தேவை. விளம்பர இல. C 308, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 308)

பாவித்த சோதனைப் பேப்பர்கள், பழைய கொப்பிகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணா இண்டஸ்ரீஸ், இணுவில். [A 112]

கொம்பசிட்டர், மெஷின் மன் தேவை. நேரில் வருக. ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-303]

## தவறிவிட்டது

Borwn நிறமுடைய பாக் [Bag] ஒன்றுக்குள் E 107591 இலக்கமுடைய பாஸ்போர்ட்டும் விமான டிக்கட் ஒன்றும் 18-1-86இல் கொழும்பிலிருந்துவந்த யாழ்தேவி வண்டிக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் C. கோபாலச்சாரி, மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C309]

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் நாவலர் வீதியில் அமைந்துள்ள 4அறைகள் கொண்ட வீடு ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு: 155 (114), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 314)

## சோதிடம்

உங்கள் பிறந்த திகதிப்படி 1986ல் அதிர்ஷ்டசாலிகள் யார்? யார்? விற்பனையாகிறது. ரூபா '/-. சோதிடர் V. A. சிவராசா, வேலணை. (C 317)

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 88 இரசாயனம். ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 26-01-86 (ஞாயிறு) 06-30 a. m. (சனி, ஞாயிறு 06-30 a. m.) பிரிவு II ஆரம்பம்: 27-01-86 நேரம் 4-45 p. m. (திங்கள், புதன் 4-30 p. m.) C 315)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### மருத்துவ பீடத்திற்கு மரத்திலான பரிசோதனைக்கூட தளபாடங்கள் வழங்குதலும் பொருத்துதலும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ரூபா 10,00000/-பெறுமதியான மரத்திலான பரிசோதனைக் கூடத் தளபாடங்கள் வழங்குவதற்கும் பொருத்துவதற்கும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. அளவுகள் மாதிரி வரைபடங்கள் ஆகியவற்றை பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 30-1-1986-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள முடியும்.

விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 200-/க்கு தபாற்கட்டளை/ காசுக்கட்டளை அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 10-2-1986 முற்பகல் 10-00 மணியாகும். விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் UJ/F/SK/02 10-2-86 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்

A 120

## இன்றைய பலன்

மாதம்: தை
திகதி; 9(1986-1-22)
கிழமை: புதன்
திதி: துவாதசி பின் இரவு வரை
நக்ஷத்திரம்: ரோகிணி
காலை 8-44ன்மேல் மிருகசீரிடம்

மேடம்: செலவுக்கு வேண்டிய பணம்இன்று கிடைக்கும். விருந்துபசாரத்திற்கு இடமுண்டு. தொழிலிலும் நன்மையுண்டு

இடபம்: நிதியில் முடக்கம் ஏற்படும். எதிலும் மந்தநிலை தென்படும். தனிவழியில் நாட்டம்செலுத்துவீர்கள்.

மிதுனம்; புனைந்துரைகளால் மனதுபுண்படும். அதிகாரப்போதையில் தவறுகள் நடக்கும். இன்று அமைதியே நன்று.

கடகம்: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னான தினம். அறிவுத்தாகம் மேலிடும், இனபந்துககள் கொண்டாட்டமும் உண்டு.

சிங்கம்; உண்மை இன்று ஊமையாகிவிடும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை விலைக்கு வாங்கிக்கொள்வீர்கள். செலவிற்கும்இடமுண்டு.

கன்னி; படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள். தொழில்புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும். தாய்வழிச்செய்தியும் கிட்டும்.

துலாம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள். மக்களால் மகிழ்ச்சியும் குடும்பத்தில் சுமுகமான நிலையும் உண்டு.

விருச்சிகம்: முகமன்பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர். கணவன் மனைவி உறவில் பூசல் நிறைந்ததாக இருக்கும்

தனுசு: இன்பத்தின் அணைப்பில் இதயத்தைப் பறிகொடுப்பீர். காதலரின் எண்ணங்கள் கைகூடும். எதிர்பார்த்த வரவிலும் திருப்தியுண்டு.

மகரம்: திடீர் நடவடிக்கை கழ மேற்கொள்வதன் மூலம் வருந்தநேரிடும். ஏமாற்றத்துக்கும் இடமுண்டு. பிரயாணத்தைப் பின்போடவும்.

கும்பம்: உவகைதரும் சம்பவங்கள் இடம்பெறும். உறவினர்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். பிதாவழியாலும் நன்மையுண்டு.

மீனம்: கல்வித்துறையில் நல்லமுன்னேற்றம் காணப்படுகிறது. ஆசிரியருக்குப் புகழ் குவியம். சிலருக்குத் திடீர் வரவுமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## E. C E. Part-II

(Electronics and Mechanical)

Director, Jaffna College Technical Institute wish to meet all Students and Lecturers of E. C. E-Part II course at 10-00 a. m. on Saturday 25th Jan. 1986 at

**St. JOHN'S ACADEMY,**

Chundukuli, Jaffna.

DIRECTOR.

(A 117)

## Wanted Opticians Trainees

Applications are invited from suitable persons (Both Sex) for Trainees for our Jaffna Branch as opticians. Apply with Bio-Data together with testimonials on or before 10-02-1986. Selected Applicant must be prepared for interview and training at Colombo. Initial Salary will be Rs.1200/- (All inclusive).

Application should be sent to the Director through

**The Manager**
Albert Edirisinghe,
Opticians Ltd,
Jaffna Branch,
No, 12, Upstairs,
Modern Market,
**Jaffna.**

C 318

## பேராதனை பல்கலைக்கழக (வெளிநிலை) விரிவுரைகள் கல்வியாண்டு 1986/87

கலைமாணி B. A.
விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B. Sc.

க. பொ. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் விபரத்தினையும் விண்ணப்பபடிவத்தினையும் ரூபா 5/- செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு :

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உதவிப்பதிவாளர், பட்டப்படிப்புகள் கல்லூரி.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யவேண்டிய விண்ணப்பபடிவங்களை எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

C 307

## ஓர் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியிலிருந்து இளைப்பாறிய வட்டுக்கோட்டை கிழக்கு திரு. மருதமுத்து மகேசனை 09-01-86 அதிகாலை 5-45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் கடத்திச் சென்றனர்.

இவர் இருதயநோய், வாதநோய், மூலநோயினாலும் பீடிக்கப்பட்டு இளைப்பாறி தனது இல்லத்திலே தனது கருமங்களையே பார்க்கமுடியாத தேகநிலையிலுள்ளவர். இந்த உண்மையான நிலையை உணர்ந்து கருணை கூர்ந்து மனிதாபிமானத்துடன் இவரை இவரது இல்லத்தில் எதுவித நிபந்தனையும் இன்றிக் கொண்டு வந்து விடுமாறு வேண்டுகிறோம்.

நாங்கள் எல்லோரும் இவரதுவிடுதலைக்குக்கடவுளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், சுற்றத்தார்,
வட்டுக்கோட்டை.
சித்தங்கேணி மக்கள்.

C 295

## வெளிவந்துவிட்டது!

ஆரம்ப

### விண்ணியல் Elementary Astronomy

எழுதியவர்:
W. S. செந்தில்நாதன்
B. A., Dip. in Ed., F. R. A. S.,
சட்டத்தரணி, தலைவர் - யாழ். வானியற் கழகம்.

வானியல் வளர்ச்சி, கிரகங்கள், கிரகணங்கள், நட்சத்திரங்கள், பால்வழி, நெபுலங்கள் முதலியனபற்றிப் படங்களுடன் விளக்கும் அரியநூல். சமூகவியல் விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கும் உகந்தது.

விலை ரூபா 18/-

கிடைக்குமிடங்கள் :
1. பூபாலசிங்கம் புத்தகசாலை, பெரியகடை, யாழ்.
2. சோதிடவிலாச புத்தகசாலை, பெரியகடை, யாழ்.
3. ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்.

C 311

புங்குடுதீவு
முத்துமாரி அம்பாள் அனுக்கிரகம்
அனைவர்க்கும் கிட்டுவதாக
உங்களுக்குத் தேவையான மரக்கடைச்சல் கட்டை உடன்பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**குகன் மரக்காலை**
**50, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(ஓடர்கள் செய்துகொடுக்கப்படும்) C 319

## தென் யேமன் விவகாரம்:

# ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றி நிச்சயமற்ற தகவல்கள்!

## வடயேமனுக்கும் பிரச்னை தாவும் அறிகுறி!!

ஏடன், ஜனவரி 21

**தென்யேமனில் அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்ற குழப்பநிலை நிலவுகிறது. இதேவேளை தென்யேமனில் தொடரும் மோதல்கள் வடயேமனுக்கும் பரவக்கூடுமென அந் நாட்டு மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.**

தென்யேமனில் ஒரு வாரத்துக்கும் மேலாக ஆளும் கம்யூனிசக்கட்சி ஆதரவாளர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல்கள் நடைபெற்றுவருவது தெரிந்ததே, இதைத்தொடர்ந்து தென்யேமன் அரசாங்கம் பதவிகவிழ்க்கப்பட்டுள்ளது என செய்திகள் வந்தன. ஆயினும் ஏடன் வானெலி இதனை மறுத்துள்ளது. தென்யேமன் ஜனதிபதியைப்பற்றி எந்தத்தகவலும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### உலகச் செய்திகள்

தென்யேமனில் உள்ள பெரும்பாலான கட்டிடங்கள் இடிந்தநிலையிலும் எரிந்தநிலையிலும் காணப்படுகின்றன

இதனிடையே தென்யேமனில் செித்துவந்த பிரிட்டிஷ் குடிமக்கள் நாட்டைவிட்டு வெளியேறி இங்கிலாந்து வந்துள்ளனர்; இவர்களில் யேமனுக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் அதிகாரிகளும் அடங்குவர். (செ)

## நீரினடியில் கிளைவிடும் ஆங்கில - பிரெஞ்சு உறவு!

பாரிஸ், ஜனவரி 21

பிரான்ஸ் நாட்டையும், இங்கிலாந்தையும் ரயில் பாதை ஒன்று ஆங்கிலக் கால்வாயின் கீழாக நீரினடியில் இணைக்கவுள்ளது.

பிரான்ஸுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சரும், பிரான்ஸ் ஜனதிபதி திரு. மித்தரோனும் கூட்டாக இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்விரு தேசங்களையும் இணைக்கும் ஆங்கிலக் கால்வாய்ன் கீழாக இப்பாதை அமைக்கப்படும். இப் பாதையை அமைக்க சுமார் 5 வருடங்கள் எடுக்குமெனவும் செலவு சுமார் 300 கோடி டாலர்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் இருநூறுண்டுகளுக்கு முன்னர் பிரெஞ்சு சக்கரவர்த்தி நெப்போலியன், இவ்விரு நாடுகளையும் இணைக்கும் பாதை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கண்ட கனவு இப்போதுதான் நிறைவேறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [செ]

### கோப்பாய் வடக்கு

# சமாதானசபையின் சேவைக்கு பாராட்டு

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு சமாதான சபையின் விசேட பொதுக்கூட்டம் தலைவர் திரு. சி. இராசரத்தினம் தலைமையில் கோப்பாய் பாலர் விடுதியில் நடைபெற்றது தலைவர் தனது உரையில் சபையின் கடந்தகால சேவைகள் பற்றி சுருக்கமாகக்கூறி, இதுவரையில் கிடைக்கப்பெற்ற 100 முறைப்பாடுகளில் 91 முறைப்பாடுகள் சுமுகமான இணக்கம் காணப்பட்டுத் தீர்க்கப்பட்டதாகவும், இச்சபையின் சிறந்த சேவைக்கு அனைவரும் நல்ல ஒத்துழைப்பு வழங்கியதாலேயே விசாரணைகளை நன்றுகவும் விரைவாகவும் பூர்த்தி செய்ய முடிந்ததென்றும் தெரிவித்தார்.

சபையின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் சீ. க. சுப்பிரமணியம், க. மார்க்கண்டு, செ. செல்வரத்தினம், த. சிவஞானம் ஆகியோர் உரையாற்றினர்.

சபை பொறுப்பேற்றநாள் தொட்டு இன்றுவரை சட்டப்படியான நீதிமனற விசாரணைகளுக்கு மக்கள் செல்ல முடியாத நிலையில், நீதிமன்றத்தாலேயே விசாரிக்கமுடியாத வழக்குகளையும் அன்றுடபலதரப்பட்ட பிரச்னைகளையும் இச்சபை காலதாமதமின்றி பணச் செலவு எதுவுமின்றி, திருப்தியானமுறையில் தீர்த்துவைத்தமையை 91 விசாரணைகளைப் பூர்த்திசெய்ததிலிருந்து அறியமுடிகிறதென்றும். வறிய விவசாய மக்களின் பணம் கோட்டுக்காக செலவுசெய்யப்படாது சேமிக்கமுடிந்ததெனவும், பொதுமக்களின் நேரத்தையும் மீதப்படுத்தி, நீதியான தீர்ப்புக்களை வழங்கியதை கோப்பாய் வாழ் மக்கள் நன்குணரவேண்டுமெனவும், பாராட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டது.

## இந்து விடுதியில் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

வடபகுதி இணைப்பதிகாரி - தமிழ்ப் பிரதேச பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுவினரின் சந்திப்பை அடுத்து மேற்கொண்டு ஆற்றவேண்டிய பணிகள் பற்றி ஆராய்வதற்கு, நல்லூர் இந்து விடுதியில் இம்மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை காலை பிரஜைகள் குழு கூடுகிறது. [க]

## வியாசர்பாடியில் பொலிஸ் சுட்டதில் இருவர் மரணம்!

சென்னை ஜன, 21.

சென்னையில், ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நோக்கிப் பொலிசார் சுட்டதினால் இருவர் மரண மடைந்துள்ளனர். பத்துப்பேர் காயமடைந்துள்ளனர்.

சென்னையிலுள்ள வியாசர்பாடி பொலிஸ் நிலையத்தை நோக்கியே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

இப்பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிறையிலேயே இறந்ததற்கு எதிர்ப்புத் தொிவித்து அப்பகுதி மக்கள் இந்த ஊர்வலத்தை நடத்தினர். ஊர்வலம் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதாலேயே பொலிசார் சுடவேண்டி ஏற்பட்டதென அறிவிககப்பட்டது.

இச்சம்பவத்தில் 42 பொலிசாரும் காயத்துக்குள்ளாகினர். பத்துப்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ)

## உலகை விஷமாகக் காணும் யூதப் பெண்!

### புதன் மஞ்சரி

ருத் வோட்டர்மான் [Ruth Watermann]; இரண்டாம் உலகப் போரில் இவரது தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் அனைவருமே விஷ வாயுக் கூடங்களில் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

அன்றிலிருந்து இந்த யூதப் பெண்ணுக்கு இவ்உலகம் பெரும் நச்சுவாயு மண்டலமாகவே தென்படுகிறது. 52 வயதான இப்பெண்மணி ஒரு சிற்பக் கலைஞராவார். இந்தியாவில் இருக்கும் இவர், 'போபால்' விஷ வாயுவில் 2000 மக்கள் கொல்லப் பட்டதை பொறுக்க முடியாதவராகக் காணப்படுகிறுர்.

ருத்வோட்டர்மான் தமது 'உள்ளக்கிடக்கை'க்கு சில வடிவம் கொடுத்துள்ளார். இதன் விளைவு? 'ஓர் இளம் இந்தியத் தாய் முக்காடிட்டபடி கையில் விஷ வாயுவினுல் இறந்த தனது குழந்தையை ஏந்திக்கொண்டு இது என்ன அநியாயம் என்று வாயில் கைவைத்து ஏக்கத்துடன் கண்ணீர் மல்கும்' ஒரு வடிவத்தை இவர் செதுக்கித் தயாரித்துள்ளார்.

'காங்கிரீட்'டில், 5 லட்சம் ரூபா செலவில் இச்சிலையை இவர் தயாரித்துள்ளார். இதனை 'போபால்' அழிவை ஏற்படுத்திய யூனியன் கார்பைட் தொழிற்சாலைக்கு முன்பாகவே அவர் நிர்மாணித்துள்ளார்.

'நாஸிகளையும், விஷவாயுக்களையும் சமனுக நோக்கும் இவர், போபாலில் மட்டுமல்ல, உலகம் முழுவதையும் நச்சு வாயு படிப்படியாகக் கொன்று வருகிறது என்றும், இதனைத் தடுத்து இப்பூமியை பசுமையான பூஞ்சோலையாக மாற்றுவதற்கு தனது உயிரையும் தியாகஞ்செய்யத் தயார் என்று இந்த யூதப் பெண் கூறுகிறுர். [கி]

★ ★ ★

### உடலைத் துண்டாடும் முதலைகளுடன் உறவு

ஒரு மனித உடலை 'லபக்' கென்று இருவேறு துண்டுகளாக்கும் பயங்கர முதலைகளுடன் (Alligator) ஒரு கனேடியக்குடும்பம் மூன்று சந்ததியாக நெருங்கியஉறவு வைத்துள்ளது.

இக்குடும்பத்தின் பியர் காரக்வாக் (வயது 20) என்ற இளைஞன் தற்போது தமது முதலை உறவினர்களைப் பராமரித்து வருகிறுன்.

கனடாவில் இந்த குடும்பம் வசித்து வருகிறது. கொடிய முதலைகளை வளர்ப்பததோடு சாசஸங்கள் செய்யவும் அவற்றுக்கு இக்குடும்பம் கற்றுக்கொடுத்துள்ளது.

200 கிலோ கிராம் எடை, 3 மீட்டர்கள் நீளம், கூரிய 120 பற்களைக்கொண்ட (Razor sharp teeth) முதலையே அக்குடும்பம் வளக்கும் முதலைகளில் மிகப்பெரியதும், பயங்கரமானதுமாகும்.

இவற்றின் வளர்ப்பையும், சாசஸங்களையும் பார்வையிடுவோர் 'மாரடைப்பு' வரும் அளவுக்குப் பிரமிப்படைகின்றனர் என்று ஒரு பத்திரிகையாளர் குறிப்பிடுகிறுர் [கி]

### தன்சுயசரிதை பற்றி பிரெஞ்சு சிந்தனையாளர் ரூசோ!

"நான் என்ன செய்தேன்? எப்படி வாழ்ந்தேன்? என்பதை என்சுயசரிதை கூறும். நான் செய்த நல்லவைகளையும், தீயனவைகளையும் ஒரே மாதிரி ஒளிவு மறைவின்றி வெளிப்படையகவே கூறியுள்ளேன். நான் செய்த மோசமான காரியங்களை விட்டு விடவுமில்லை. நான் செய்யாத எந்த நல்ல காரியத்தையும் இங்கே நான் செய்ததாகப் புகுத்தி விடவுமில்லை.

அற்பனுக, நிந்தனைகுரியவனுக, நல்லவனுக உயர்ந்த மனம் படைத்தவனுக, கண்ணியமானவனுக எந்தெந்தச் சமயத்தில் எப்படி, எப்படியெல்லாம் இருந்தேனே அப்படியப்படியே என் உண்மைச் சொரூபத்தை எடுத்துக்காட்டியிருக்கிறேன் ஓ! நித்தியபரம் பொருளே! தேவரீர் காண்பது போலவே என் அந்தராத்மாவைத் திறந்து காட்டியிருக்கிறேன் [ப]

### வாய்க்கு அடக்கமாக 'சுதந்திரசிலை'

நியுயோர்கிலுள்ள சுதந்திரச்சிலை (Statue of liberty) க்கு வயது 100 ஆகவிருக்கிறது.

இதனைக் குறிக்கும் வகையில் அமெரிக்காவில் பல விரிவான ஏற்பாடுகள் பல்வேறு கோணங்களிலும் வடிவம் பெற்றுவருகின்றன.

தற்போது எங்கும், எதிலும் சுதந்திரச்சிலை மயமாககவே காணப்படுகிறது. நியூயோர்க் 'சாக்லேட்' தயாரிப்பாளர் ஒருவரும் தனது பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை.

இந்தப் பெண் சாக்லேட் உற்பத்தியாளர். 'வாய்க்கு அடக்கமாக' பல்வேறு உயரங்களிலும் சாக்லேட்டில் சுதந்திரச்சிலைகளைத் தயாரித்துள்ளார்.

"இவ்வளவு காலமும் சுதந்திரத்தை அனுபவித்தவர்கள், இன்று அதனைச் சுவைக்கட்டும்" என்கிறுர் இந்த சாக்லேட் பெண். (கி)

### மின்சாரக் கார்கள்!

மின்சாரக் கார்கள் மே. ஜேர்மனியில் பிரபலமடைந்துவருகின்றன. எரிபொருள் விலை, சுற்றுடல் மாசடைதல்போன்றவற்றைத் தவிர்க்கும் விதத்திலேயே இக்கார்கள் தயாராகியுள்ளன.

இக்கார்கள் மின்சார 'பாட்டரி'களில் [Battery' 2 லட்சம் கிலோ மீற்றர்கள் வரை ஓடக்கூடியவை. ஆயிரந்தடவைகள் இந்தப் பாட்டரிகளுக்கு சாதாரண வீட்டு மின்சாரத்தில் மின்சக்தியை ஊட்டமுடியும்.

1903-ம் ஆண்டு மே. ஜேர்மனியில் மின்சாரக் கார்கள் பாவிக்கப்பட்டன. ஆயினும் பாட்டரிப் பாவனை அப்போது குறைவாக இருந்தகால் நீண்டகாலம் அவைநீடித்திருக்கவில்லை. [கி]

### முள்ளியவளை சம்பவம்

[முல்லைத்தீவு]

முள்ளியவளையில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 3 இராணுவத்தினர் பலியானதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் "தமிழீழ விடுதலைப் புலிகள்" விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. 9 வாசனங்களில் வந்த இராணுவத்தினருக்கும் தமக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகவும் பின்னர் அவர்கள் சென்றுவிட்டதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## மணிவாக்கு

இடக்கரத்தும் அம்பெய்ய வல்ல வீரா, நீ என்கையில் கருவயாய் மாத்திரம் இருக்ககடவாய்.

— பகவத்கீதை

# நமது நோக்கு

## நிரந்தர தீர்வு

இந்த உலகத்தின் பெருமையை உணர்ந்தவர் எவரும் நிரந்தரமான முடிவுகள்பற்றி பேசத் தயங்குவார்.

நேற்று வாழ்ந்த மனிதன், நேற்றுக்கொலுவிருந்த அரசு, இன்று இல்லை என்றுசொல்லுகின்ற அளவுக்கு நிலையாப் பெருமையுடைய உலகம்.

இது என்றும் உண்மையாயிருந்தாலும் இன்று மிகச்சிறப்புடன் விளங்குகின்றது. தென்யேமன் ஜனாதிபதி அலிநாசர் முகமட்டுக்கு நேர்ந்த கதி இதற்கு நல்ல உதாரணம்,

எனவே என்றுமில்லாத அளவிற்கு இன்று கொந்தளிக்கும் இந்நன்னாட்டில் 'வடக்கும் கிழக்கும்தான் போர்க்களம் அவற்றைத் தவிர நாடுமிகஅமைதியாக வாழ்கிறது'' என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார். அதனை உறுதிப்படுத்த சென்னை இந்துப்பத்திரிகையாளரையும் கம்பகாக் கூட்டத்துக்கு கூட்டிச்சென்றிருக்கிறார்.

அரசபத்திரிகைகள் இந்த வாய்ப்பைச்சும்மா விடுமா? நாட்டின் இரு மாகாணங்களில் போர்நிகழ்ந்தால், இச்சிறுநாட்டின் எஞ்சிய பகுதிகள் அமைதியாக வாழ்வது எங்ஙனம்?

1983 ஆடி மாதக் கலவரம் உலகையே அதிர்ச்சிக்குள்ஆழ்த்தியதுஇன்றுவெளி மாகாணங்களில் வாழும் தமிழர்கள் ஓரளவிற்கு பாதுகாப்பாக வாழ உதவியதும் அக்கலவரமே.

எனவே ''வடக்கிலும் கிழக்கிலும் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுத்தபடியால் எழுந்த இக்குழப்பத்தை 'நிரந்தரமாகத் தீர்க்கப் போகின்றேன்' என்றுசொல்லியிருக்கிறார் ஜனாதிபதி ஜெயவர்த்தன

ஒன்றுகுறிப்பிடத்தக்கது; இம் மாதிரியாக, இந்தத் தொனியில் ஜனாதிபதி முன்னெப்போதும் பேசியிருக்கவில்லை. அதேசமயம் சமயத்துக்கேற்றவகையில் முரண்பாடாகப் பேசுவது தவிர்க்கமுடியாத நிலையாக அவருக்கிருக்கலாம்.

பயங்கரவாத ஒழிப்பென்ற பிரயத்தனத்தில் களைப்பறியாத ஜனாதிபதி களைத்திருக்கிறார் என்பது தெளிவு.

பத்திரிகைகள் பாராட்டும் ராணுவ சாதனைகள் அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஆபிரகாம் லிங்கன் பட்டபாட்டை நினைவூட்டுகின்றன.

தோல்விக்குமேல் தோல்வியடைந்தநிலையில் ஜனாதிபதிலிங்கன் தளபதிக்கிட்ட கட்டளை, ''தளர்ச்சியடையாதீர். எந்தச் சிறுவெற்றியையும் உடனுக்குடன் அறிவிக்க அதற்குரிய பாராட்டும் உற்சாகமும் உடனடி கிடைக்கும்'' என்றார்.

உடனடியாகத் தளபதி அனுப்பிய தந்தியை ஜனாதிபதி லிங்கன் படித்து ரசித்தாராம். ''எதிரியின் ஆறு பசுக்களைக் கைப்பற்றி விட்டோம்! அவற்றை என்ன செய்யலாம்'' என்பதே தளபதியின் தந்தி.

''எனது பாராட்டுகள். பாலை உடனே கறவுங்கள்'' என்பது லிங்கனின் பதில்.

இந்த நாட்டின் 'பயங்கரவாதிகள்' - தமிழ்போராளிகள் எவ்வளவு வேகமாக அழிக்கப்படுகின்றனர் என்பதை எங்களை விட இந்தியா நன்கறியும்; வெட்ட வெட்டத் தழைக்கின்றனர் போலும்.

தமிழ் அப்பாவி மக்கள் தினசரி கொல்லப்படுவதே இன்று தமிழரின் மிகக் கொடுமையான பிரச்னை. ஆனால் தமிழரைப் பணயம் வைத்து உருவாகும் எந்தத் தீர்வும் நிரந்தரமாகாது.

நாம்புள்ளிஅடிப்படையில் சிறுபான்மையினரென்ற போதும், இந்த நாட்டின் நிரந்தர தேசிய சமூகம், நாகரிகம் படைத்தஉயர்ந்த லட்சியத்துக்காக உயிர் கொடுக்கும் மக்கள் நாம் என்று அன்று உலகத்துக்கு உணர்த்திய பெரியார் பலர் இலங்கைத் தமிழர்கள்.

இன்று இதனை உலகுக்கு இடித்துரைக்கும் மக்கள் தமிழ்ப்போராளிகள் - பயங்கரவரதிகள் அல்ல; இதனை நாம் பொறுப்புடன் சொல்லும்போது இன்று எங்கள் மத்தியில் நிலவும் குறைகளை அறியாதிருக்கவில்லை.

தமிழ்இளைஞரை 'போராளிகள்' என்று நாம் கௌரவிக்கும்போது அவர்கள் பேரில் நடைபெறும். அதர்மச்செயல்களைக் கண்டிக்கத் தயங்கவில்லை.

எங்கள் உயிருக்கும் உடலுக்கும் உடைமைக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக மானத்துக்குப் போராடும் தமிழ் இளைஞர்கள் அறத்துக்கு மாறான செயல்களில் சிக்கிக்கொண்டால் வருங்காலம் சூனியம்.

வருங்காலத்தின் அபாயத்தை உணர்ந்து தீர்க்க தரிசனத்துடன் ஆரம்பமாகி வளர்ந்து வரும் இந்தப்போராட்டம் திசை திருப்பப்படாதென்பதே எமது பிரார்த்தனை.

போரில் வெற்றி கண்டு நாடு பிடிக்கும் போரல்ல இது. 'எங்கள் உரிமைகளுக்கு உயிரையும்கொடுப்போம்' என்பதை தெளிவுபடுத்தியதே இந்தப் 'போரின்' வெற்றி.

எனவே நிரந்தர தீர்வு தமிழரின் சுதந்திர வாழ்வுக்குவழி வகுக்கவேண்டும். அதற்கு நாமும் தகைமையுடையவராக வேண்டும். காலம் எடுக்கும் அத்தகைய தீர்வு வேறு எவராலும் தரக்கூடிய கொடையல்ல. சண்டையை நிறுத்தி சமாதான வாழ்வுக்குஅடிகோலுவதே மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு. அது பகைமை ஒழிய நட்புவளர உதவும் தீர்வாக இருக்கவேண்டும்.

---

#### பிரஜாவுரிமை வழங்கியதின்மூலம்

# மலையக மக்களின் உயிருக்கு பாதுகாப்பு ஏற்பட்டுவிடுமா?

## ஈரோஸ் கேட்கிறது

(கொழும்பு)

''மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதன் மூலம் அவர்களின் உயிருக்கும். உடமைக்கும் பாதுகாப்பு ஏற்பட்டுள்ளதென்று கூறமுடியாது. ஏனெனில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் பிரஜாவுரிமை உள்ளவர்கள் நாளாந்தம் படுகொலை செய்யப்படுகிறார்களே.''

இவ்வாறு இலங்கை நாடற்றோருக்குப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது சம்பந்தமாக 'ஈரோஸ்' வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது; ''இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இவ்விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் புதிய ஒப்பந்தமானது, மலையக தமிழ் மக்களையும் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களையும் பிரித்துவைக்கும் இலங்கை அரசாங்கத்தின் திட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். அத்துடன் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் அப்பாவி மலையக மக்களை மேலும் சுரண்ட இது வழிவகுத்துள்ளது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கை வாழ் அனைத்துதமிழ் மக்களினதும் விருப்பத்திற்கு மாறாகவே புதுப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்புதிய ஒப்பந்தத்தில் இயற்கை அதிகரிப்பு என்ற விஷயம் தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

ஏற்கனவே இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ற சுமார் இரண்டு லட்சம் மலையகமக்கள் வன்செயல்களினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இலங்கையில் மலையக தமிழ் மக்களினதும், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களினதும் பிரச்னைகள் ஒன்றோடொன்று இணைந்தவை. இவைகளை வேறுபடுத்தித் தீர்வு காணமுடியாது. இரண்டுக்கும் ஒருமித்த ஒரு நீதியான தீர்வே நிர்ந்தரமான தீர்வாக இருக்கும். (ய)

---

## காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த ராஜீவ் காந்தியின் புதிய திட்டம்

[புதுடில்லி]

காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தும் முதல் கட்டமாக காங்கிரஸ்[இ]கட்சியின் தலைவரும், இந்தியப்பிரதமருமான திரு.ராஜீவ் காந்தி கட்சியில் பெரும் மாறுதல்களை செய்திருக்கிறார்.

கட்சியின் ஜனநாயக மரபுகளை வலுப்படுத்தவே இம் மாற்றங்களை மேற்கொண்டிருப்பதாக இந்தியந் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பத்திரிகையாளர் மத்தியில் கூறினார்.

மத்திய வர்த்தக அமைச்சர் திரு. அர்ஜுன்சிங், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சர்மா ஆகியோருக்கு காங்கிரஸ் கட்சியில் முக்கிய பதவிப் பொறுப்புகள் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தங்களது அமைச்சர் பதவிகளை ராஜினாமா செய்தனர். ராஜ்ய சபாவின் துணைத் தலைவர் திருமதி நெஜ்மாவும் கட்சிப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

திரு. அர்ஜுன்சிங் கட்சியின் உபதலைவராகவும், திரு. அஞ்சையா, திரு. சர்மா, திருமதி நெஜ்மா ஆகியோர் கட்சியின் பொதுச்செயலாளர்களாகவும்

[7-ம் பக்கம் பார்க்க]

---

# மக்கள் கருத்து

## அ.இ. காந்திசேவா சங்க ஆண்டுக் கூட்டம்

12-1-86ல் உருத்திரபுரம் காந்திநிலையத்தில் அ. இ காந்திசேவா சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் அழைக்கப்பட்டிருந்தது. 10-1-86 முதல் 13-1-83வரை அடைமழை, பெருவெள்ளம் காரணமாகவும் போக்குவரத்து பிரயாண வசதியீனங்கள் காரணமாகவும் கொழும்பிலிருந்தும ம. யாழ். மற்றும் பிரதான பகுதிகளிலிருந்தும் எவரும் (செயலாளரைத் தவிர) கலந்து கொள்ளவில்லை.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் மாத்திரம் சமூகளித்திருந்தனர். பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கும், கணக்கு அறிக்கையை சமர்ப்பிப்பதற்குமாக நிர்வாகக்குழுவால் உடுப்பிட்டி சமூகஜோதி வி. கே. சுப்பிரமணியம் அவர்களுடன் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினனாகிய சமூகத் தொண்டன் க. ச. கந்தசாமி ஆகிய நான் 10-1-86 அன்றே உருத்திரபுரம் சென்று முன்னேற்பாடான காரியங்களைக் கவனித்தேன்.

கூட்டத்திற்குகோரமில்லாததால் 9-30க்கு ஆரம்பிக்க வேண்டிய கூட்டம் 11-30வரை கோரம்கிடைக்கவில்லை. வெளியூர் உறுப்பினர்களும் சமூகமளிக்கவில்லை. பலருக்கு அழைப்புக்கள் 11-1-86 காலை வரை கிடைக்கவில்லை.

இதனால் பொதுக்கூட்டமாகவும், நிர்வாகத் தெரிவுக் கூட்டமாகவும் நடத்த முற்பட்டபோது அதனைக் கண்டித்து கூட்டம் முடியிம்வரை உண்ணாவிரதமிருக்க நேர்ந்ததை காந்திய நெறியின் பெயரால் ஆழ்ந்த வேதனையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

க. ச. கந்தசாமி
காந்த கோட்டம்,
சங்கானை.

---

## அநாதை இல்லத்துக்கு அன்பளிப்பு

[மாவிட்டபுரம்]

மாவை லயன்ஸ் சழகம் மானிப்பாய் மகேசன்அநாதை இல்லத்துக்கு 3000 ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களை வழங்கியுள்ளது. அநாதை இல்லத்தில் உள்ள 50க்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் வகையில் அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

லயன்ஸ் கழகத்தின் தலைவர் திரு. ஏ. வி, சர்மா, செயலாளர் திரு. எஸ். ஜெகதீசன், பொருளாளர் திரு. ஏ. சண்முகநாதன், திட்ட முகாமையாளர் திரு. கே. குமாரதேவன் கொண்ட குழுவினரே இப்பொருட்களை நேரடியாகக் கையளித்தனர்.

---

## அகதி மாணவருக்கு கல்வி வசதி

[யாழ்ப்பாணம்]

நல்லூர் சங்கிலியன் புனர் வாழ்வுக் கழகத்திலுள்ள 98 திருமலை அகதி மாணவர்களுக்கு நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலையிலும், நல்லூர் சாதனா வித்தியாசாலையிலும் கல்வி கற்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் புனர்வாழ்வுக்கழக செயலாளர் செல்வி நிர்மலா பாலசிங்கம் செய்துள்ளார்.

இதேவேளை மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி சமூகநல ஸ்தாபனங்களும், பொதுமக்களும் மாணவர்களுக்கான சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை வழங்க முன்வரவேண்டும் என்றும் செயலாளர் கேட்டுள்ளார். [ச]

---

## சொற்கலைப் புலவன்

பொன்னணிக்குக் கோலமிட்டுப் புதுமெருகு செய்வது
போல்
புகழேட்டில் ஏறிநின்று புவியாண்ட வுயிர்க்கினிய
அன்னைமொழித் தமிழினுக்கே ஒப்பியலை நீயளித்தாய்
அமுதத்தீஞ் சுவையூறும் யாழ்ப்பாண வைபத்தில்
தொன்னலமு மறியவைத்தாய் தூய்மையொடு
நெறிதவறுத்
தவக்குணமும் பெற்றுநின்று தாரணியிற் தமிழ்
வளர்த்த
மன்னவனு யுனைக்கண்டேன் மறைப்பணிபிற் தாளாது
மன்னுயிர்க்கு வழிகாட்டி மலைவிளக்காய் ஒளிதந்தாய்

★ ★ ★

முற்றுமிந்தப் புண்பட்ட மக்களது வாழ்வுயர்ந்து
மலர்ச்சிகாண நாளெல்லாம் மேன்மைமிகு பணிசெய்து
சொற்கலையின் புலவனெனச் செகம்போற்றும்
பேறடைந்தாய்
சாதியென்ற இருள்கலைத்த செஞ்சுடரே! மூவாசைப்
பற்றறுத்த அருள்ஞானப் பிரகாசா! உருண்டோடும்
பூவிற்பன் மொழியறிந்த பண்டிதனே! கையளவே
கற்றறியாச் சிறியவனுங் கடலளவுன் பெருமையினைக்
கூறுவேனுன் காலடிக்குக் குழைகின்ற தமிழ்படைத்து.

— பாஷையூர் மு. சிங்கராயர்

★ [இன்று நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் நினைவு தினம்]

# பொலிஸ்நிர்வாகமிருந்தால்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்று நேற்றுப்பிற்பகல் இடம் பெற்றது. இம்மாநாட்டி லேயே பிரிகேடியர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், பொலிஸ் அதிபர் கிங்ஸ்லி சில்வா, காப்டன் கொத்தலா வல மற்றும் வல்வெட்டித் துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் இம் மாநாட்டில் கலந்துகொண்ட னர்.

''பாதுகாப்பு வலயம் என்று யாழ். இராணுவக்கோட் டையை அண்டிய 1000மீற்றர் சுற்றுவட்டப்பகுதி அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனல் இந்த வலயத்தின் எல்லைகள், இதில் பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகள்பற்றி தெளிவான அறிவித்தல்கள் எதுவும் தரப்படவில்லை. இது தவிர, கனரக ஆயுதங்கள் இந்த வலயத்தில் பாவிக்கப் படுமெனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. இதுகுறித்து நீங்கள் கூறுவது என்ன?'' என்று கேட்டேன்.

பிரிகேடியர்: பாதுகாப்பு வலயம் பொதுமக்களை அச் சுறுத்த ஏற்படுத்தபடவில்லை. அவர்களின் பாதுகாப்புக்கருதி யும், குறிப்பாக யாழ். கோட்டை இராணுவமுகாம் உட்பட வடபகுதியின் ஏனைய இராணுவமுகாம்களின் பாது காப்புக்கருதியுமே இந்தப்பாது காப்புவலயம் அறிவிக்கப்பட் டுள்ளது.

''சில நாட்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் கோட்டைமீது மேற்கொண்ட பீரங்கித்தாக்கு தலில் இராணுவ வீரர் ஒரு வர் கொல்லப்பட்டார். இது போன்றசம்பவங்களைத் தவிர்க் கும்வகையிலேயே 'பாதுகாப்பு வலயம்' ஏற்படுத்தப்பட்டுள் ளது

''இங்கு பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்புமிருக்காது. இதுமுழுமையாக ஒரு பாது காப்புவலயமாகவே இருக்கும். கோட்டையைச் சூழவரமட்டு மல்லாது, யாழ்ப்பாணத்தின் அனைத்து இராணுவ முகாம் களைச் சூழவிருக்கும் ஆயிரம் மீற்றர்பகுதிகளும் பாதுகாப்பு வலயமாக இருக்கும்.

''இந்த வலயங்களில் தீவிர வாதிகள் தாக்குதல்களை நடத் தும்பட்சத்தில், அவர்கள்மீது பதில்தாக்குதல் மேற்கொள் வது தவிர்க்கமுடியாததாகஇரு க்கும். அப்போதுஏற்படும்நெரு க்கடி நிலையைத் தவிர்க்கும் வகையிலேயே இப்பாதுகாப்பு வலயம் அறிவிக்கப்பட்டுள் ளது. இங்கு அநாவசியமா கவோ, கண்மூடித்தனமா கவோ கனரக ஆயுதங்கள் எதுவும் பாவிக்கப்பட மாட்டா. (ஆயுதங்கள் குறித்து எதுவும் குறிப்பிடப் படவில்லை.)

''பொதுமக்கள், பொது ஸ்தாபனங்கள், அலுவலகங் களை இவ்வலயத்தில் பாது காப்புக் கருதி எச்சரித்துள் ளோமே தவிர, இங்கிருந்து வெளியேறும்படி கேட்டுக் கொள்ளவில்லை. பாதுகாப்பு வலயத்தில் வைத்தியசாலை கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் குறித்து இராணுவம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளும்'' என்று அவர் தெரிவித்தார்.

வடக்கில் முழுமையாக பொலிஸ் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்படுமானல் இரா ணுவம் வாபஸ் பெறப்படும் எனவும் பிரிகேடியர் குறிப் பிட்டார்.

## அறிக்கை

''பாதுகாப்பு வலயம் ஏற் படுத்தப்பட்டதற்கான அவசி யம் நீங்கும்போது, இந்த வல யமும் விலக்கப்படும்'' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொதுமக்கள் குழு நேற்றுக்காலை கோட்டை இராணுவத்தலைமையகத் தில் பிரிகேடியர் ரூபசிங்காவைச் சந்தித்தது. இச்சந்திப்பை யடுத்து இராணுவத்தரப் பினல் விடுக்கப்பட்ட அறிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

''பாதுகாப்பு வலயம் குறித்து பதற்றமோ, பீதியோ கொள்ளத்தேவையில்லை. இவ் வலயத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் பிரச்னைகள் அனுதா பத்துடனும், தகுந்தவிதத்தி லும் அணுகப்படும்.'' (கி)

# வாபஸ் பெறு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வண. பிதா மைக்கேல்சாமி, பேராசிரியர் ஜெயா பசுபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின் தலைமையில்; வல் வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவைச் சேர்ந்த திருவாளர் கள்: எஸ். குமாரசாமி, கே. முருகமூர்த்தி, யாழ் பிரஜை கள் குழுவின் சார்பில் திரு. ஆர். கே. குணரட்ணம், திரு. எஸ். பி. அருமைநாயகம், பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவின் சார்பில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், திரு. ஏ. தேவராஜன், மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழு எஸ் சண்முகலிங்கம், வண. தேவ ராசா, நாவற்குழு பிரஜைகள் குழு எஸ். தில்லைநாதன், வி. தமநாதன், மயிலிட்டி தெற்கு பிரஜைகள் குழு பி. சிவசுப்பிர மணியம், எஸ் அருணாசலம், பலாலி பிரஜைகள் குழு ஜி. ம சிலாமணி ஆகியோர் சென் றிருந்தனர் யாழ். மாவட்ட அமைச்சரின் இணைப்பதிகாரி திரு. எஸ். பி. பாலசிங்கமும் இச்சந்திப்பில் கலந்துகொண் டார்.

யாவும் இருந்தமாதிரியே இயங்கலாமென்றும், தாக்க முற்படும்பட்சத்தில் நடவடி க்கை எடுக்கப்படுமென்றும் தம்மைச் சந்தித்த பிரஜைகள் குழுவினருக்கு பிரிகேடியர் கூறியதாகத் தெரிகிறது.

## வாபஸ்பெறுமாறு கோரிக்கை

''சனச்செறிவு மிகுந்த பகுதி யான யாழ். நகரில் அமைந் துள்ள கோட்டையில் இருக் கின்ற இராணுவம் உடனடி யாக வெளியேறவேண்டும். யாழ்ப்பாணம் கோட்டையின் சுற்றுடலில் பிரகடனப்படுத் தப்பட்டுள்ள ஆயிரம் மீற்றர் தூர பாதுகாப்பு வலயத்தை உடனடியாக வாபஸ்பெற வேண்டும்'' என்று கோரும் இரு கோரிக்கைகளையும் வற் புறுத்தி 'யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள அரசியல் சார் பற்ற மக்கள் செயலூக்கக் குழு' நேற்றுக் காலை யாழ். கோட்டையில் பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்காவைச் சந் தித்தது. 'சற்றடே றிவியூ' ஆசி ரியர் காமினி நவரட்ன இக் கோரிக்கைகளை ஒப்பமிட்டு பிரிகேடியரிடம் சமர்ப்பித் திருந்தார்.

கடந்த 19ம் திகதி மேற்படி 'செயலூக்க குழுவினர்' கூடித் தீர்மானங்களையும் எடுத்திருந் தனர். இதற்கிணங்கத் தெரிவு செய்யபபட்ட உப குழுவினர் பிரிகேடியரை நேற்றுச் சந்தித் தனர். இக்குழுவில் வண. பிதா மைக்கேல்சாமி, டாக்டர் ஜி. செபஸ்தியாம்பிள்ளை, திருவா ளர்கள்; கே. எஸ். ஆறுமுகம், எம் கனகராஜநாயகம், ஈ. ஜீவ ரத்தினம், எம். எஸ். பீற்றர், எஸ். தேவராசா, காமினி நவ ரட்ன ஆகியோர் இடம்பெற் றிருந்தனர்.

குழுவின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்த பிரிகேடியர், யாவும் உள்ளது உள்ளபடி செயல்படமுடியும் என்றும், தம்மை எதிர்ப்பவர்கள் மீது தாமும் பதில் நடவடிக்கையில் ஈடுபடுவோம் எனவும் தெரி வித்ததாக அறியப்படுகிறது.

## காரைநகரில் வெளியேற்றம்

''காரைநகரில் உள்ள கடற் படை முகாமைச்சுற்றி ஆயி ரம் மீற்றர் தூர பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதால் இங்குள்ள நீலங்காடு, பலுகாடு, கருங் காலி, தோப்புக்காடு, படத்து வளவு, ஊரி, களபூமி ஆகிய குறிச்சிகளைச் சேர்ந்த மக்கள் வெளியேறுகின்றனர். இப் பகுதிகளில் சுமார் ஆயிரத் துக்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இத்துடன் போக்கு வரத்தும் முற்ருக ஸ்தம்பித மடைந்துள்ளது. தற்சமயம் அறுவடை காலமானதால் மக்கள் வயல்களுக்குச் சென்று வேலைசெய்ய மறுக்கிருர்கள். ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடி யாதுள்ளது. ஊர்காவற்றுறை க்குப் போகமுடியாதுள்ளது''.

இவ்வாறு கூறும் மகஜரை காரைநகர் பிரஜைகள் குழு வினர் நேற்றுக் காலை கோட் டையில் பிரிகேடியர் ரூபசிங்கா விடம் கையளித்து நிலைமையை எடுத்துக் கூறினர்கள்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் சென்ற யாழ்ப் பாணப் பகுதிகளின் பரஜை கள் குழுவினருடன் காரைநகர் பிரஜைகள் குழுவினரும் சென் றிருந்தனர். இக்குழுவில் திரு வாளர்கள்: வி. சுப்பிரமணியம், நா. கந்தையா, செ. நவரத் தினம், கே. சிவமணி, வித்து வான் மு. சபாரத்தினம் ஆகி யோரும் இடம்பெற்றிருந் தனர்.

[ஐ]

# வேலணை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளின் விநியோகத்தில் கிளைக்கு கிளை விநியோகத்தில் தவறு கள் இருப்பதாகவும் மூன்று கிளைகளில் மட்டும் காரணங் கள் காட்டாது அபேட்சகர் கள் நியமனத் திகதியைப் பின் போட்டது.

தேர்தல் ஒழுங்குவிதிகளு க்கு முரணனவை என்றும், சங் கத்தின் அங்கத்தவர்களால் தேர்தல் அதிகாரிக்கும், தலைவ ருக்கும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது,

இதைத் தொடர்ந்து அங்கு நின்ற பொதுமக்களால் சில கிளைகளில் தாக்கல்செய்யப் பட்ட அபேட்சகர்களின் நிய மனப்பத்திரங்களை பொதுமக் கள் தேர்தல் அதிகாரியிட மிருந்து பறித்து ''சரியான நீதியை வழங்குங்கள்' என்று கூறிக்கொண்டு சங்கத்தின் தலைமைக்காரியால முன்பாக தீயிட்டிக் கொழுத்தினர்கள்!

அதனை பெருந்தொகையான மக்கள் கூடிநின்று பார்த்த னர்.

## யாழ். தபால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலக ஊழியர்கள் அங்கு கடமையாற்ற முடியாத நிலை யிலிருந்தனர்.

நேற்றுத்தொடக்கம் பொது மக்களின் நன்மைகருதி தபால் அலுவலகத்தின் பின்பக்க வ யிலால் ஊழியர்கள்சென்று கடமையாற்றினர்.

கடந்த ஒரு வாரகாலமாக தேங்கிக்கிடந்த தபால்களை விநியோகிப்பதற்கான வேலை கள் இன்று தொடங்கும் என்று அலுவலக உத்தியோ கத்தர் ஒருவர் தெரிவித்துள் ளார். [மா]

## இன்று...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

செயல்களை கட்டவிழ்த்து விடக்கூடும் என்று எதிர்பார்க் கப்படுவதால் புதுடில்லியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.


### நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

அன்புடையீர்,

24-12-1985-ல் சிவபத மடைந்த வைத்திய சிரேன்மணி பொன்னையா சிதம்பரநாதனின் மகன் திருப்பரங்கிரி நாதனின் சபிண்டீ கரண கிரியைகள் [23-01-86] வியாழக் கிழமை அராலி மேற்கு வட்டுக்கோட்டையிலு ள்ள எனது இல்லத்தில் நடைபெறும். அத்தரு ணம் உற்ருர், உறவினர், நலன்விரும்பிகள் அனை வரும் இவ் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புரி மையுடன் வேண்டுகி றேன்.

அன்னரது இறுதிக்கிரி யைகளில் பல்வேறு வகை யிலும் உதவிகள் புரிந் ந்தும், ஆறுதல் கூறி யும், மலர்வளையங்கள் சாத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்,
சிதம்பரநாதன் குடும்பம்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

C 330

### தசாக - கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் குரோதன வரு டம் தை மீ 1-ம் திகதி [14-1-86] செவ்வாய்க் கிழமை இரவு இறைவ னடி இணைந்த எமது தந்தையாரும், சண்டி லிப்பாயைப் பிறப்பிட மாகக் கொண்டவரும், கந்தர்மட வாசியும், யாழ். கொட்டடி நமசி வாய வித்தியாசாலை இளைப்பாறிய ஆசிரியரு மாகிய, பிரம்மஸ்ரீ ஐ. முத்துக்குமாரசுவாமி ஐயர் அவர்களின் தசா கக் கிரியை 23-1-86, சபிண்டீகரணம் 25-1-86 கிருகயக்ஞம் 26-1-86 ஆகிய தினங்களில் கல் வளவு, தெல்லிப்பழை கிழக்கில் நடைபெறும். இக்கிரியைகளில் உற்ருர் உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்து கொள் ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்,
மு. சந்திரகலாதர சர்மா,
மு. சத்தியவாகீஸ்வர சர்மா,
மு. பாஸ்கர சர்மா.

C 320

### கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தெல்லிப்பளை புகையிரத நிலையத்துக்கருகாமையில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. சிதம்பரநாதன், Attorney at Law, தெல்லிப்பளை.

[C322]

### VACANCY

Instructor: Electrical Engineering Candidates with minimum NDT (Elect.) qualification can apply immediately and call over for an interview on Wednesday 29-1-86 at 9-00 a. m. Director, Jaffna College Technical Institute. Vaddukoddai. (A126)

### யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி குடியியல் படவரைஞர் பெறுபேறுகள் - 1985

இம்மாத முடிவுக்குள் மேற் படி பெறுபேறுகள் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப் படும். வரைபடங்கள் குறை ந்தது நாற்பது தயாரித்தவர் கள் மட்டும் பெறுபேற்றைப் பெறுவார்கள், உடன் அதிப ருடன் தொடர்பு கொள்ள வும்.

[A125] அதிபர்

### பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

### வெற்றுச் சாக்குகள், பழைய ரயர், ரியூப், லொறிஉதிரிப்பாகங்கள் மற்றும் பொருட்கள் ஏல விற்பனை

பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்தின் களஞ்சியத்திலிருக் கும் 4012 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 1986 - 01 - 27 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு, களஞ்சி யத்தில் பகிரங்க ஏலத்தில்விற் பனை செய்யப்படும். இத் தோடு பழைய ரயர், ரியூப், லொறி உதிரிப்பாகங்கள் மற் றும் பொருட்களும் ஏலத்தில் விற்கப்படும்.

ஏலக்கூற்றில் வெற்றி பெறு வோர் ஏலத்தில் பெற்ற பொருட் பெறுமதியைஉடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீதுபெற்று, தமக்குரியபொரு ட்களை உடன் ஏற்றிச் செல்லு தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
திகதி: 1986-01-20.

[A123]

### எம்பயர் திரையில்

10-30, 2-30, 6-30
சிவகுமார் - அம்பிகா
மீண்டும் பராசக்தி

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
நீதிக்கு தலைவணங்கு
[புதிய பிரதி]

### லிடோ சினிமா

10-30, 2-30, 6-30
சிவகுமார்-லட்சுமி
ஸ்ரீபிரியா-தேங்காய்
மனோரமா
அவன்-அவள்-அது
(புதிய பிரதி கலர்)

### வகுப்புகள்

VISPA ENGINEERING AID HALL புதிய பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. 328, நாவலர் வீதியில் ஆனைப்பந்தி சந்தியிலிருந்து குறுகிய தூரத்தில் கைலாசபிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. ரேடியோ, T. V. [டெக் உட்பட], வயறிங், வெல்டிங், மோட் டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங் யாழ். நக ரில் குறைந்த கட்டணத்துடனும், செயல்முறைகளுட னும் கற்பிக்கப்படுகின்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
வெளிநாடுகளில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
விசேட சலுகைகளும் முதலில் சேருபவருக்கு வழங்கப்படும்.

தொடர்பு:- நிர்வாகி,
328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[C 327]



'நான்' சஞ்சிகை சிறப்பு மலர் அறிமுகவிழா நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றபோது விழாவில் 'நான்' ஆசிரியர் வண. வின்சன்ற் பற்றிக் அ. ம. தி. அடிகளார் உரையாற்றுவதையும், அருகில் நல்லை ஞானசம்பந்த ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், பிரதம விருந்தினரான யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோரையும், மலரின் ஆய்வுரையாற்றிய செம்பியன் செல்வன், விழாவுக்குத் தலைமைவகித்த 'தினகரன்' ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் மற்றும் விழாவில் கலந்துகொண்டோரையும் இங்கு காணலாம்.

# ஆசிரியை மரணம்: பகிரங்கத் தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

அரியாலையைச் சேர்ந்தவரும் கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலய ஆசிரியையுமான உதயகுமார் சமலராணியின் [21 வயது] மரணவிசாரணை முடிவில்பகிரங்கத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணையை நடத்தினர்.

இறந்தவரின் கணவரின்சகோதரன் கே. சந்திரகுமார், இறந்தவரின் பெட்டியிலிருந்து எடுத்த கொப்பியொன்றை, மரணவிசாரணையில் சமர்ப்பித்தார்.

இறந்தவர் அக்கொப்பியில் பெற்றோருக்கும் உறவினருக்கும் கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது: நான் வாழ விரும்பி உங்களை வெறுத்துச் சென்றேன். உங்களைப்பிரிந்து என்னால் வாழமுடியாது. எனக்கு ஆசிரியை வேலை கிடைத்தது சாவுக்குத்தான்.

நீங்கள் தகுதியையும் தராதரத்தையும் விரும்பினீர்கள் நான் அதை விரும்பவில்லை. உதயனின் நடத்தையும் குணமும் எனக்குப் பிடித்தது.

எனக்கு வேறு திருமணம் செய்யவிருப்பமில்லை என்பது உங்களுக்குத்தெரியும். அப்படியிருந்தும் உங்களின் வலியுறுத்தலால் சம்மதித்தேன். அது என் பிழை. உங்கள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டேன்.

நான் சந்தோஷமாகவே சாகிறேன்.

என்னைப் படிப்பித்தவர்களுக்குபலனைத்தர முடியவில்லை. அதனை நினைத்து தினமும் அழுவேன் என் ஆசைத்தம்பியை எப்படியாவது படிக்கவைத்து பட்டதாரியாக்கவேண்டும்என்பது என ஆசை. அதனை நீங்கள் நிறைவேற்றவேண்டும்.

இனிமேலாவது யாராவது காதலித்தால் அவர்களைப் பிரிக்கவேண்டாம். கடைசியில் என்னைப் போன்றே முடியும்.

பதில் நீதவான் பகிரங்கத் தீர்ப்பு வழங்கி, இம்மரணம் பற்றி உடன் விசாரணை மேற்கொண்டு மேல் அறிக்கையை யாழ். நீதவான் மன்றுக்குச் சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

(க)

# 21 சடலங்கள்மீது பிரேத பரிசோதனை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு இருதயபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதலில் பலியானவர்களில் இருபத்தொரு பேரின் சடலங்கள் கல்லடி முகாமுக்கு நேற்றுக்காலை கொண்டுசெல்லப்பட்டு பிரேத பரிசோதனை நடந்தது.

டாக்டர்களின் அறிக்கையின்படி, பதின்மூன்று பேர் 'சயனைட்' விழுங்கி இறந்தனர் என்றும் எட்டுப் பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள் என்றும் தெரிய வந்தது.

நேற்று மட்டக்களப்பு பகுதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை இரவு நேரத்தில் குண்டுச்சத்தங்கள் கேட்டன.

## கோப்பாய் லயன்ஸ் சுகாதார சிகிச்சை

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்களுக்கான இரண்டுநாள் சுகாதார சிகிச்சையை கோப்பாய் லயன்ஸ்கழகத்தினர் மேற்கொள்ளவுள்ளனர்

கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரி, கோப்பாய் மாகவித்தியாலயம், சரவணபவானந்தாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மேற்படி சுகாதார சிகிச்சை மாணவர்களுக்கு இன்று அளிக்கப்படவுள்ளது.

## கண்டன சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறக் கோரும் யாழ். முஸ்லிம் மக்களின் சுவரொட்டிகள் யாழ்.

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் அவர்செய்த பணிகள்

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்தின் செயலாளரும் சிறந்த கட்டிடப் பொறியியலாளருமான அன்பர் திரு இ. வைத்திலிங்கம் அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்கும் ஆற்றொணுக்கவலைக்கும் உள்ளாக்கிவிட்டது. யாழ். திவ்ய ஜீவன சங்கத்துக்கு மட்டுமல்ல சைவத்துக்கும், தமிழ் இனத்துக்கும், வழிகாட்டியாக நேர்மை, நீதி, கருணை, சரி எனப்பட்டதை செய்து முடிக்கும் அஞ்சாமை இவற்றையெல்லாம் தனது இலட்சியங்களாகக்கொண்டு அவர் யாழ் நகரில் செய்த பணிகளை நாம் மறக்கமுடியாது.

யாழ்ப்பாண திவ்ய ஜீவன சங்க மண்டப வேலைகள் ஆரம்பமாகி பலகாலம் அக்கட்டிட வேலைகள்தொடராமல் சுவாமி சிவானந்தரின் அடியார்கள் கவலையோடிருந்த காலத்தில் அன்பர் வைத்திலிங்கம் தனது தொழில்நுட்பத்திறனை முழுமையாகப் பிரயோகித்து ஆச்சிரமக் கட்டிடவேலையைத் திறம்பட முடித்து ஆச்சிரம மண்டபத்தில் சுவாமி சிவானந்த மகரிஷியின் உருவச் சிலை தெட்சணாமூர்த்தியின் திருவுருவம் ஆகியவைகளை ஸ்தாபித்த அன்னாரின் அரும்பணியை சிவானந்த அடியார்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

சுவாமி சிவானந்தரின் அரியபோதனைகளான அன்பு செய், சேவைசெய், கொடுத்துப்பழகு, தியானம் செய் என்பவற்றை தனதுசொந்த வாழ்வில் அநுஷ்டித்து சுவாமி சிவானந்த மகரிஷியின் உண்மைத் தொண்டனாக அன்பர் வைத்திலிங்கம் ஆன்மீகப் பணியாற்றியதை நாம் எல்லோரும் அறிவோம்.

யாழ்நகருக்குப் புகலிடம் தேடிவந்த திருமலை அகதிகளின் துயர்துடைக்க அகதிகள் முகாமுக்குச் சென்று, அகதிகளுக்கு ஆறுதல்கூறி பலபெறுமதியானபொருட்களை அன்பளிப்புச்செய்து அகதிகளுக்கு அன்னமிட்ட அமரரின் கை உயரும் முன்அமரரின் ஆவிபிரிந்த செய்தி தமிழ் மக்களை ஆறாத் துயரில ஆக்கியதை நாம் அனைவரும் அறிவோம்.

யாழ். நகரில் அடியார்களுக்கு ஆத்மீக சாந்தியளிக்கும் திவ்ய ஜீவன சங்க ஆச்சிரம மண்டபம், நல்லைக்கந்தன் ஆலய மணிமண்டபம் நல்லைக்கந்தன் ஆலய சித்திரத்தேர் தரிக்கும் மண்டபம், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய மணிமண்டபம், நல்லை நாவலர் மணி மண்டபம், யாழ். திறந்த வெளி அரங்கு, யாழ்ப்பாண நகர எல்லையில் வந்தோரை வரவேற்கும் நுழைவாயில் ஆகியவைகள் என்றும் அமரர் வைத்திலிங்கத்தின் தொழில் நுட்பத்திறமையின் புகழைப் பாடும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## 493 பேர் பயிற்சியாளராக தெரிவு

[மாவிட்டபுரம்]

சென். ஜோன் அம்புலன்ஸ் சங்கத்தினர் வடமாகாணத்தில் அளித்து வந்த முதலுதவி சிகிச்சை முறைகள் சம்பந்தமான பயிற்சியைபடுத்து 493 பேர் பயிற்சியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்தகவலை வடபிராந்திய சென். ஜோன் அம்புலன்ஸ் சங்க ஆணையாளர் திரு சி. எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 92 பேரும், ஊர்காவற்றுறை சென். அந்தோனியார் கல்லூரியில் 107 பேரும், இடைக்காடு மகாவித்தியாலயத்தில் 60 பேரும், வரணி சுகாதாரக்குழுவில் 75 பேரும், மட்டுவில் வடக்கு சுகாதாரக் குழுவில் 45பேரும், மட்டுவில் தெற்கு சுகாதாரக் குழுவில் 35 பேரும், கொடிகாமம் ப. நோ. கூ. சங்க மகளிர் குழுவில் 79 பேரும்பயிற்சியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

Computer Programming
and
Data processing Course
(Basic Language)
6 MONTHS

Weekend Classes by Qualified and Experienced panel of Lecturers.
Commencement:- 25-01-1986 at 10-00 a. m.
Fees:- Rs. 1500/-
(கவணை முறையிலும் செலுத்தலாம்)
Ideal for those who seek employment abroad.
குறிப்பு:
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.

CANTABIA Institute,
21, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201. A-47

யாழ். மக்களுக்கு
ஓர் நற்செய்தி
வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுக்ள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்:
விஜயமாலா ரவல்ஸ்,
213, 215 செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205
நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள்
யாழ்ப்பாணத்தில்
தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னாகம்.
(9315)

ஹோம் பிறுன்ஸ் லிமிட்.,
புதிய மோஸ்தர் துல்ஹிரிய புடைவைகள்
சிறிய தொகை வந்துள்ளது என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.
ஹோம் பிறுன்ஸ்
லிமிட்டெட்,
82, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
(A46)

கனடா, ஜேர்மனி,
பிரான்ஸ், இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர்
உங்களை அழைத்துச் செல்வார்.
அத்துடன்
மத்தியகிழக்கு நாடுகளில்
ஆண், பெண் இருபாலாருக்குமான
வருமானத்திற்கான ஒழுங்கு செய்து கொடுப்பதுடன்
பாஸ்போட், BOND,
சகல நாடுகளுக்குமான
விமான ரிக்கட்டுகளுக்கும் துரிதகதியில்
GROUP
ATLANTIC
TRAVELS
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 109)

## ஓய்வுபெற்ற உப அதிபர்

யாழ்ப்பாணம் கன்னியர் மடம் தமிழ் மகாவித்தியாலய உப-அதிபர் திருமதி மேரி ஹெலன் குணசிங்கம் 40வருடகாலஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். ஆசிரியையாகவும், உப அதிபராகவும் பணியாற்றிய திருமதி மேரி குணசிங்கம் ஒன்பது வருடங்களாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

1946-ல் பேசாலை றோ. க. பாடசாலையில் தனது பணியை ஆரம்பித்தார். இவர் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக ஆசிரியத் தொண்டாற்றி நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மாணவர்களுக்கும் பயனுள்ள ஆசிரியையாக விளங்கினார். இவர் மட்டக்களப்பு, பதுளை, குருநாகல், போன்ற வெளி மாவட்டங்களில் பணிபுரிந்ததுடன் நாரந்தனை, யாழ்ப்பாணம் கன்னியர் மடம் தமிழ் மகாவித்தியாலயத்திலும் ஆங்கில மகாவித்தியாலயத்திலும் கடமையாற்றினார். கற்ற பாடசாலையிலேயே கல்வி புகட்டும் ஆசிரியையாகத்தொண்டாற்றும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பது அரிது. ஆனால் திருமதி குணசிங்கத்துக்கு இத்தகைய ஒரு வாய்ப்புக் கிடத்து 3 வருடங்களாக யாழ். கன்னியர் மடம் ஆங்கில மகாவித்தியாலயத்திலும் பணிபுரிந்தார்.

உள்ளத்திலே உண்மையும், வாக்கிலே தெளிவும், தொழிலிலே திறமையும், தொண்டிலே நேர்மையும் கொண்ட திருமதி மேரிஹெலன் குணசிங்கத்தின் உயரமான தோற்றத்தைப் போன்று உள்ளமும் உயர்ந்ததாகவே காணப்படுவதைப் பலரும் அறிவர்.

''அன்பொடு இயைந்த வழக் கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு''

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப வாழ்ந்து வருபவர் திருமதி மேரி ஹெலன் குணசிங்கம்,

**எஸ். லோகநாதன்.**

---

## கண்டன

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

நகரில் காணப்படுகின்றன.

இச்சுவரொட்டிகளில் ஸ்ரீலங்கா அரசே! முஸ்லிம் அனைவரதும் வேண்டுகோள் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறு கோட்டையை அகற்று. யாழ் முஸ்லிம்கள்'' என்று எழுதப்பட்டுள்ளது. (க)

---

## யாழ்நகரில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணோடு மண்ணாய்ப் போகும் இம்மட்பாண்டம், இம்மண்ணுடம்பு இதன் அழிவைக் கண்டுகலங்குவது மனித இயல்பு. ஆனால் ஜீவாத்மா என்றுமுள்ளது. அழியாதது அதனைப்பற்றித் தொடர்வது இருவினைப் புண்ணிய பாவமும்ம.சிதறுறும்சிந்தனை இன்றி இறைவன் திருநாமத்தை இடையறாது இந்திரிய வாக்கு இடையூறின்றி பக்தியின் உச்சநிலை பரகதி. அந்த வகையில் அமரர் திரு. வைத்திலிங்கம் அவர்களின் ஜீவாத்மாவும் பெம்மான் பொற்பாதங்களை சார்ந்து நிரதிசய நித்தியானந்த பெருவாழ்வு எய்துமாறு உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.கனகரத்தினம்**
**தலைவர் திவ்யஜீவன சங்கம்**
**தலைவர் வ.போ.ச.**

## வியாழனுக்கு விசேட அர்ச்சனை வழிபாடு

[யாழ்ப்பாணம்]

வியாழமாற்றத்தையொட்டி நாளை 23-ம் திகதி வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் விசேட அர்ச்சனை வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

## மணிவாசகர் விழா

மாவிட்டபுரம்)

பளை-வீமன்காமம் கிராம முன்னேற்றச்சங்கமும் சனசமூகநிலையமும் இணைந்து மணிவாசகர் விழாவை சிறப்பாக கொண்டாடியது.

சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. மு. சின்னத்துரை தலைமையில் நடந்த இவ்விழாவில் பலர் உரையாற்றினார்கள்-

---

## 'விமானங்கள் மீண்டும் வரும்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'ஈழநாடு' நிறுவனமும் யாழ் இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்திய இரசிகமணி கனக செந்திநாதன் ஞாபகார்த்த குறுநாவல் போட்டியில் முதற் பரிசுபெற்ற நாவல்களுள் ஒன்றான நெல்லை க. பேரன் எழுதிய 'விமானங்கள் மீண்டும் வரும்' நூல் வெளியீட்டுவிழா இம்மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30க்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் திரு வே. தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் வெளியீட்டுரையும் எழுத்தாளர்களான தெணியான், செல்வி சந்திரா தியாகராஜா, கோகிலா மகேந்திரன் க.சிதம்பரப்பிள்ளை [ஆசிரியர்], குப்பிளான் ஐ. சண்முகன் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்தவுள்ளனர். கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனின் கலைநிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (ச)

---

## பட்டதாரி மாணவர் ஒன்றியம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணக் கல்விநிலையத்தில் யாழ் வெளிவாரிப் பட்டப் படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள் வட இலங்கை வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள் ஒன்றியம் என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

கல்வி; கலாச்சாரம், எதிர்காலம் என்ற அடிப்படை நோக்கை முன்வைத்தே இவ்வொன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

விரிவுரையாளர் திரு.குமாரவேலு போஷகராக பணியாற்றும் இவ்வமைப்பில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் செல்வன் மி. அருளானந்தன், உபதலைவர் செல்வி இ. சாந்தி செயலாளர்; செல்வி எஸ். செல்வராணி, உபதலைவர்: செல்வி எஸ், ராகினி, பொருளாளர்; செல்வன் ஆர். யோகராஜா. உப பொருளாளர்: செலவன் ரி. தயாபரன், ஒன்றியத்தின் நிர்வாகக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது

ஒன்றியத்தின் ஆலோசனைச் சபையில் ஆசிரியர்கள் திரு. தழந்தை, திரு. குணராஜா செங்கை ஆழியான்), திரு. சண்முகானந்தம் திருமதி அருள்நங்கை ஆகியோர் இடம்பெறுகின்றனர். (ச)

## நூரளையில் மண் சரிவு

(கொழும்பு)

நுவரேலியா மாவட்டத்தில் முல்கல்கல என்ற இடத்தில் மண்சரிவு ஒன்று ஏற்பட்டதன் விளைவாக சுமார் ஆயிரம் குடும்பங்கள் பத்திரமான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள ஆசினர் ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் சிகிச்சைநிலையம் முற்றாக சரிந்துபோயுள்ளது.

---

## சர்வோதய சிரமதான சமிதி

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி சனசமூக நிலைய சர்வோதய சிரமதான சமித்தியின் ஆறுவது வருடாந்தப் பொதுக்கூட்டம சர்வோதய அமைப்பாளர் திரு. கி. நடராசா தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகக் கீழ்க் காண்போர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்; மு. சடாட்சரம். செயலாளர்: இ. லெட்சண குமார், தனாதிகாரி: மா. அன்பழகன். இக்கூட்டத்தில் உப உணவுற்பத்தியில் பொது மக்களை ஊக்குவிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

---

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு அம்பாள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த பொங்கலன்று நடைபெற்றது அதன் விபரம் வருமாறு: தலைவர்: மா. சின்னத்துரை, உப தலைவர்; க. புலேந்திரன், செயலாளர்; ச. க. இரத்தினம், உப செயலாளர்: க. பாலசுப்லரமணியம், பொருளாளர், செ. சிவானந்தம், உப பொருளாளர்: செ. சிவகுமார், கணக்குப் பரிசோதகர் நா. மாரிமுத்து, நிலையப் பொறுப்பதிகாரி: நா. அருளானந்தம் காப்பாளர்: சி. கந்தையா.

இவர்களுடன் மேலும் ஏழு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## கோவிலுக்குச் சென்று திரும்பிய இரு யுவதிகளின் நகைகள் அபகரிப்பு

(கொழும்பு)

கோவிலுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த இரு மிழ் யுவதிகளின் 11,800ரூபா பெறுமதியான தங்க நகைகள், பயமுறுத்தி கொள்ளையடிக்கப்பட்டன

கப்பித்தாவத்தை பிள்ளையார் கோவிலுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த இரு யுவதிகளின் அருகில் ஒருவான் வந்து நின்றதாகவும், அதிலிருந்து இறங்கிய மூவரே இவர்களைப் பயமுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது. [ய-பி]

---

## முஸ்லிம்கள் படுகொலை: சுவரொட்டி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களின் பெயர் விபரங்களைக் குறிப்பிட்டு, 'எமதுமக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்ச்சியாகத் தொடர்கின்றன' என்றுதலைப்பிடப்பட்டு யாழ். நகரில் பெரிய சுவரொட்டி காணப்படுகிறது இதில் குறிப்பிடப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள்:

கடந்தவருடம் அக்டோபர் 14ல் மூதூரில் இராணுவத்தாலும், ஊர்காவல்படையாலும் படுகொலை செய்யப்பட்டவர்கள்: ஜனாப் சேகு மொகமட் (48), ஜனாப் பக்கீர் குட்டிசலீம் (28) ஜனாப் மஸ்தான் நசீம் (18), ஜனாப் முகமட் சவ்றீவ் (25).

''அக்டோபர் ஏழாம் திகதி மன்னார் உயிலங்குளத்தில் இராணுவத்தினரால் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வருடம் ஜனவரி 15-ல் யாழ். நகர் துப்பாக்கி சூடுகளுக்கு இலக்காகிமரணமடைந்தவர்கள்: சேயின்பு பெண் (50), ஜனாப் பி. நவாமி (16), மஸ்கின் சாகுல் நசீர், ஏ. எம். நிசார் (18), றரூல்தீன் (24), கமால்தீன் மிகுறுவ் (20), 16ம் திகதி யாழ் நகர் சம்பவத்தில் படுகாயங்கள் அடைந்தவர் பலர். ஜனாப் யூசுப் காயமடைந்தவர். மரணமடைந்தோர் அப்துல் ஹமீட் (20), காமில் அரூஸ் (33)'' [ஐ]

---

## காங்கிரஸ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் பாராளுமன்றக் குழுவின் உறுப்பினர்களாக திரு. கமலாபதி திரிப்பாதி, திரு. அர்ஜுன்சிங், திரு. நரசிம்மராவ, திருமதி மரகதம் சந்திரசேகர், திரு. கே. கருணாகரன், திரு. தர்பார்சிங், திரு. சௌத்திரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். விரைவில் மத்திய அமைச்சரவையிலும் சில மாற்றங்களைச் செய்யப் போவதாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறினார். (பி)


# சமுத்திரா மல்ரி சேவிசஸ்

## கிளை நிறுவன ஆரம்பவிழா

யாழ். குடாநாட்டின் மூலைமுடுக்கெங்கும் பல திருமணங்களை செய்து வைத்து மக்கள் மத்தியில் தமக்கென்று ஓர் தனியிடத்தைப் பெற்றுவிட்ட சமுத்திரா மல்ரி சேவிசஸ் நிறுவனத்தினர் தெல்லிப்பழை வாழ்பெருங்குடி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தமது கிளைநிறுவனத்தை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு சமீபமாக இன்று (22 1-1986) புதன்கிழமை ஆரம்பித்துவைக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

எமது சேவைகள் :-

- ✶ திருமண சேவை
- ✶ காணி, வீடு, மின்சார உபகரணங்கள் வாங்கி விற்கும் சேவை
- ✶ கட்டிட ஒப்பந்த சேவை
- ✶ கடவுச்சீட்டு, பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் ஒழுங்கு செய்யும் சேவை - தட்டச்சு இயந்திரங்கள் திருத்தம் செய்யும் சேவை
- ★ சிறு உற்பத்தியாளர்கட்கான சேவை
- ★ வீடியோ புகைப்பட படப்பிடிப்பு சேவை
- ★ சட்ட ஆலோசனைகள் வழங்கும் சேவை

உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்:
உங்கள் தேவை ! எங்கள் சேவை !!

## சமுத்திரா மல்ரி சேவிசஸ்

தலைமை அலுவலகம்: 303, பலாலி றோட், கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

கிளை நிறுவனங்கள்:

முருகமூர்த்தி லேன்.
நெல்லியடி,
கரவெட்டி.

கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பழை.
(ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு சமீபமாக.)

(A 124)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## மின்கம்ப மரணதண்டனை

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பில் ஊறணி என்னுமிடத்தில் ஒருவருக்கு நேற்று 'மின்கம்ப மரணதண்டனை' அளிக்கப்பட்டிருந்தது.
இவர் ஒரு சிங்களவர் என்றும் பாண் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## நல்லூர் சிவன்கோவிலில்
# மக்களின் சாந்திக்காக மகாயாகம் நாளை ஆரம்பம்!

[யாழ்ப்பாணம்]
நாட்டு மக்களின் சாந்திக்காகவும், சுபீட்சத்திற்காகவும் நல்லூர் சிவன் கோவிலில் நாளை வியாழக்கிழமை மகா யாகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்.

நல்லூர் ஸ்ரீசத்தியசாயி இல்லத்தின் ஆதரவில் பொதுமக்களின் உதவியுடன் இந்த மகாயாகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நாளைக் காலை மகா யாகம் ஆரம்பமாகும்.

யாகத்தின்போது பங்குபற்றும் அடியார்கள் பால், தயிர், இளநீர், பழவகைகள், அபிஷேகப் பொருட்கள் ஆகியனவற்றைத் தேவஸ்தானத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்

யாகத்தின்போது பங்குபற்றும் அடியார்கள் ஒருமனதுடன் மக்களின் க்ஷேமத்திற்காகப் பிரார்த்திக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். [க]

## ஒய்வூதியம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
15ம் திகதிகளில் விளையாட்டரங்கில் வைத்து வழங்கப்பட்டது. இத்திகதிகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து பாதுகாப்பின்மை காரணமாக விளையாட்டரங்கில் ஒய்வூதியம் வழங்குவதற்கு தபால் அலுவலக ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஒய்வூதியம் பெறுவோரும் அங்கு செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர். [மா]

## மரண அறிவித்தல்கள்

**ஐஷா உம்மா** குருபாவா ஆச்சிரமத்தில் சென்ற பல வருடங்களாக குருத்தொண்டாற்றிய ஆச்சி அம்மா என்றழைக்கப்படும் [ஐஷா உம்மா நாகலிங்கம்] காலமாகிவிட்டார். இன்று [22-1-86] புதன்கிழமைகாலை 8 மணியளவில் கொட்டடி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.
[C 328]

### பிலிப்பு முதலியார் இறகோரி

செட்டிகுளத்தினை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 65, மருதடி வீதி, நல்லூரில் வசித்தவருமாகிய பிலிப்பு முதலியார் இறகோரி செவ்வாய் (21-01-1986) ல் இறைபதம் அடைந்தார். அன்னார் திருமதி அந்தோனியாப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி அழகம்மா வன்னியசிங்கம், அந்தோனிப்பிள்ளை (கனடா), அலெக்ஸாந்தர் (அதிபர், செட்டிகுளம் மகாவித்தியாலயம்). திருமதி செல்வராணி தேவசகாயம், பீற்றர் (ஜேர்மனி) ஆகியோரது அன்புத் தந்தையும், வன்னியசிங்கம், திருமதி யோகவதி அந்தோனிப்பிள்ளை (கனடா), திருமதி தர்மாவதி அலெக்ஸாந்தர், தேவசகாயம் (கனடா), திருமதி மனோராணி பீற்றர் (வெளிக்கள போதனாசிரியை காணி ஆணையாளர் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22-01-1986) பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: றெகேசன் பிரான்சிஸ்
(C 337)

### திரு. வல்லிபுரம் சாமுவேல் அரியரத்தினம்

முன்னைநாள் ஓறேயன் மேர்க்கன்ரைல் ஏஜென்சி, பந்தன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் ஆகியவற்றின் உரிமையாளர் - அன்னார், காலஞ்சென்ற தங்கராணியின் அன்புக்கணவரும், சோமஸ்கந்தன் [கனடா] சகுந்தலா, புனிதவதி, பாலகிருஸ்ணன் [U K] பரமசிவம் [சுரேஸ் .ரேணேர்ஸ், பரந்தன்] மனோரஞ்சிதம் [U.K] சத்தியசீலன் [உரிமையாளர், கொழும்பு யுனைற்ரெட் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி ஹட்வெயர் ஸ்ரோர்ஸ்] ஆகியோரின் அருமைத் தந்தையும், ஈஸ்வரி [கனடா] காலஞ்சென்ற அன்னசிங்கம் [Supdt of Engineer Buildings Dept Colombo] கனகலிங்கம் [Partner - Gold Steel, Colombo] திலகவதி [U. K] நகுலேஸ்வரி [உப-தபால் அதிபர், உடையார்கட்டு] குகநாதன் [U. K] சுமித்திரா ஆகியோரின் மாமனாரும், அர்ச்சுனா, குமுதினி [கனடா] துளசி, சங்கா, வாணி, நிரஞ்சன் [U K] மீரா [U K] வாசுகி, கஸ்தூரி திவாகர், பொன்னரசி ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள், 23-1-86 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: T. கனகலிங்கம்,
சுதுமலை கிழக்கு.
[C 331]

## அமைதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஆயுதங்களைக் கையாளமுடியும். தீவிரவாதிகள் வன்முறைகளைக் கைவிட்டால் அவசரகாலநிலையை நான் ரத்துச்செய்வேன்.

''போராளிகள் தங்கள் வன்முறைகளைக் கைவிட்டு ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்,முகாம்களை மூடிவிட வேண்டும், ஜனநாயக வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டும் இவ்வாறு அவர்கள் நடந்தால் நான் நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்குவேன்.

'இலங்கைத் தமிழ்த் தலைவர்களுடனும், போராளிகள் குழுத் தலைவர்களுடனும் நான் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவுள்ளேன். இந்தியாவில் எந்தப்பகுதிக்கும் வர நான் தயாராகவிருக்கிறேன். உங்கள் நாட்டின் மாநில அரசு வர அனுமதியளிக்க வேண்டும்.

'எங்களின் பெரும் பகுதி மக்களை பாகிஸ்தானுக்கு அனுப்பி அங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த விடயங்களை மறைக்கமுடியாது. இது குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் கூறினேன்.

''ஆயுதம் தேவையென்றால் நாம் பாகிஸ்தானிடமிருந்தும், திறந்தவெளி சந்தையிலிருந்தும் கொள்வனவுசெய்யலாம். நாம் ஆயுதபலத்தில் தன்னிறைவு அடைந்துள்ளோம். எமக்கு இந்தியா உதவும்பட்சத்தில் மூன்றுமாதத்தில் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணலாம்.''

''தமிழ்ப்பகுதிகளில் இராணுவ நடிவடிக்கைகளில் இஸ்ரேல் 'மொஸாட்' ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. இஸ்ரேல் நலன்காக்கும் அலுவலகத்துக்கு வெளியே எவரும் இல்லை. அவர்களது ஆலோசனைமட்டுமே பெறப்படுகிறது. வடக்கில் சில பகுதிகளைப் பாதுகாக்கும் விடயத்தில் அவர்கள் எமக்கு உதவலாம், ஆட்பலத்தால் அல்ல; ஆயுத பலத்தால்.

''பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் இங்கு எங்கள் விமான ஓட்டிகளுக்குப் பயிற்சியளித்து வருகிறார்கள். பிரிட்டிஷ் விமானப்படை உத்தியோகத்தர்களும் (எஸ். ஏ. எஸ்.)அதிரடிப்படை பயிற்சிகள் அளித்து வருவதை நாம் மறைக்கவில்லை.

'எங்களுக்கு அரசியல் தீர்வே வேண்டும் ஆனால் போராளிகளுடன் ஒரு அரசியல் தீர்வை மேற்கொள்ள முடியாது, இது ஒரு இராணுவப் பிரச்னை அவர்கள் இராணுவத் தீர்வையே எதிர்பார்க்கிறார்கள். நான்யாருடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்வது? பேச்சுவார்த்தைக்கு இணங்காத போது அவர்கள் சுடுவார்கள்.

'கிராமியத் தொழிற்துறை அமைச்சர் திரு. தொண்டமானுடன் நான் பேசியிருக்கிறேன் அவர் ஒரு பிரார்த்தனையை ஏற்பாடு செய்தார், அதற்கு நான் இணங்காவிடில் ஒரு வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்திருப்பார். அவர் துப்பாக்கி ஏந்தவில்லை அதனால் அவருடன் ஒரு அரசியல் தீர்வுக்கு வரமுடிந்தது.
[யா-பி]

## எதிர்ப்பு ஊர்வலம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
கர்களும், சகல முஸ்லிம் அமைப்புக்களும்கலந்துகொண்டன. ஊர்வலத்தில் பெண்கள் பெருமளவில் காணப்பட்டனர்.

ஊர்வலத்துக்கு முன்னால் காரொன்றில் பாதுகாப்பு வலயத்தால் ஏற்படும் விளைவுகளை ஒலிபெருக்கியில் ஒலிபரப்பிய வண்ணம் முஸ்லிம் பிரமுகர்கள் சென்று கொண்டிருந்தனர்.

முஸ்லிம் மக்களோடுஆரம்பமான ஊர்வலத்தில் நாவாந்துறை சென்நிக்கிலஸ் தேவாலயத்திலிருந்து புறப்பட்ட பல நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கொட்டடிச் சந்தியில் வைத்து இணைந்து கொண்டனர். அதேபோல் பெருமாள் கோவிலடி, குருநகர் உட்பட பல்வேறு இடங்களிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்களும் முஸ்லிம்மக்களோடு இணைந்தன. யாழ், இந்துக்கல்லூரி வைத்தீஸ்வரா வித்தயாலயம், ஒஸ்மானியாககல்லூரி உட்பட குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளிலிந்தும் மாணவ மாணவிகள் தாமாகவே முன்வந்து சீருடைகளுடன் புத்தகப்பைகளையும் தூக்கிய வண்ணம் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்து கோஷமெழுப்பிக் கொண்டு சென்றதை அவதானிக்க முடிந்தது சங்கிலியன் புனர்வாழ்வுக்கழக அகதிகளும் நிர்வாகிகளும் வயது முதிந்தவர்களும் சுலோகங்களுடன் பின்னால் சென்று கொண்டிருந்தனர்.

இவ்வூர்வலத்திற்கு ஆதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்களும் தனியார் கடைகளும், சில பாடசாலைகளும் கதவடைப்புச் செய்தன. போக்குவரத்து சேவையும் பாதிக்கப்பட்டது. ஊர்வலம் பல வீதிகளினூடாகச் சென்று யாழ் செயலகத்தை அடைந்தது. யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

யாழ். அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அம்மகஜரில் யாழ். நகரில் 20.000 முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக கோட்டையைச் சுற்றியுள்ள 1000 மீற்றர் வலயத்துள்ளேயே வாழ்ந்து வருகிறார்கள். வலயம் பிரகடனப் படுத்தப்பட்ட அன்றே 3 முஸ்லிம்கள் இராவத்தின் ''மோட்டர் செல்'' தாக்குதலுக்கு பலியாகியுள்ளார்கள்.

முஸ்லிம்களது 9 பள்ளிவாசல்கள், 4 பாடசாலைகள், பிரசவவிடுதி, உபதபாற்கந்தோர் முஸ்லிம் நூல் நிலையம், முஸ்லிம் மக்களது பொதுத் தேவைகளை பூர்த்தி செய்யும் ஆஸ்பத்திரி, பஸ்நிலையம், வங்கிகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நீதிமன்றம் சந்தைகள் என்பன அமைந்துள்ளதால் எமது கடமைகளை செய்ய இவ்விடயங்களுக்கு செல்ல முடியாத நிலையேற்படும் இவ்வலயத்தை இரத்துச் செய்வதுடன் இராணுவ கொடுமை அகற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்' என்று குறிப்பிட்டிருந்தது.

## இராணுவ அச்சுறுத்தல்: ஈ.பி.ஆர்.எல்.எவ். எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]
''இராணுவ முகாம்களை அகற்று; பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறு என்று முழங்கி வெகுஜனங்களே கிளர்ந்தெழுங்கள் என்றதலைப்பிலான துண்டுப் பிரசுரம் ஒன்றை 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எப்.) நேற்றுவெளியிட்டுள்ளது அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''எம்மை ஒடுக்கும்ஸ்ரீலங்கா அரசு யாழ். குடாநாட்டுக்குள் செயற்படுத்த அதிகாரமளித்திருக்கும் 'பாதுகாப்பு' வலயம் குடாநாட்டை இராணுவமயப்படுத்தும் நோக்கத்தின் முதற்படியே ஆகும். இதனடிப்படையில் இவ்வலயப்பகுதிக்குள் மென்மேலும் இராணுவம் குவிக்கப்படும். பாதுகாப்பு வலயம் மேலும் விஸ்தரிக்கப்படும். இறுதியில் இந்நிலைமை யாழ். குடா நாட்டை இராணுவமயப்படுத்தி முற்றிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுபோய் விடும். இம்முயற்சி யாழ். குடாநாட்டில் வெற்றிபெறின் இதே வழிமுறை ஈழமெங்கும் கைக்கொள்ளப்படும் இப்பாரிய அபாயத்தை எதிர்நோக்கும் அதேவேளையில் இத்திட்டத்தினால், எமது மண்ணில் நாம் நடமாட முடியாது, எமது ஆலயங்களில் நாம் வழிபட முடியாது, எமது வைத்திய சாலையில் நாம் சிகிச்சை பெற முடியாது, எமது பாடசாலையில் நாம் கல்வி கற்க முடியாது. எல்லாம் 'பாதுகாப்பு வலயம்' என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்படுகிறது. குடிமக்களோடு நெருக்கமான தொடர்புடைய நிறுவனங்களைப் பறித்து படைகளின் கைகளில் கொடுப்பது குடிமக்களைவிரட்டியடித்து படைகளை நிலைகொள்ளச்செய்யும் தந்திரோபாயமே. இவ்ஆபத்தை இராணுவ அச்சுறுத்தலை நாம் முன்கூட்டியே உணர்ந்து உடனடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்.''
[மா]

## மறியல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
திரு. நமசிவாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒன்றுகூடும் சகல வர்த்தகர்கள் அங்கிருந்து ஊர்வலமாக யாழ். செயலகத்தை அடைந்து, யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கைகளடங்கிய மகஜர்களைக் கையளிப்பார்கள்.

அதேசமயம் மேற்குறிப்பிட்ட இரு கோரிக்கைகளையும் முன்வைத்து யாழ் செயலகம் முன்பாக இன்று காலை தொடக்கம் தொடர்ச்சியான காலை எட்டுமணி முதல் பிற்பகல் நான்கு மணிவரை மறியல் போராட்டம் நடத்த அன்னையர் முன்னனி திட்டமிட்டுள்ளது.

யாழ். செயலகத்துக்குள் உயரதிகாரிகள் உட்பட ஊழியர்களுக்கும் அலுவல்கள் நிமித்தம் உள்ளே செல்லமுடியாத அளவுக்கு இந்த மறியல் போராட்டம் அன்னையர் முன்னணியால் பலப்படுத்தப்பட்டிருக்கும் என்று முன்னணியின செயலாளர் செல்வி நிர்மலா பாலரத்தினம் தெரிவிக்கிறார். மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389: 24126.